ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2512/48 - 2026 ඔක්තෝබර් මස 31 වැනි සෙනසුරාදා - 2026.10.31

2512/48 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

தேசிய பொலிஸ் ஆணைக்குழு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 155 ஐ ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளித்தல்

அரசியலமைப்பின் 155 ஐ ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டது தொடர்பாக, 2023.07.20 ஆம் திகதியிடப்பட்ட 2341/51 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், 2025.05.16 ஆம் திகதியிடப்பட்ட 2436/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்டன. அவ்வாறு திருத்தப்பட்ட 2025.05.16 ஆம் திகதியிடப்பட்ட 2436/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையில் இலக்கம் 4 இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பின்வருமாறு திருத்துவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு இதன்மூலம் திட்டவட்டமாகத் தீர்மானிக்கின்றது.

அட்டவணை

I ஆம் நிரல்	*II ஆம் நிரல்*	*III ஆம் நிரல்*
அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்	*பொலிஸ் அலுவலர்களின் வகைகள்*	*கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்*
4. பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள்	(அ) பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் பரிசோதகர் பதவிக்குக் கீழான பதவிகளை வகிக்கும் பொலிஸ் அலுவலர்கள் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர).	(அ) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாக, தமது நிர்வாக அதிகார எல்லைக்குள் இடமாற்றங்களை மேற்கொள்ளுதல்.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

I ஆம் நிரல்	II ஆம் நிரல்	III ஆம் நிரல்
அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்	பொலிஸ் அலுவலர்களின் வகைகள்	கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்
4. பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள்	(ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி அலுவலர்கள்	(அ) தமது நிர்வாக அதிகார எல்லைக்குள் பணி இடைநிறுத்தம் செய்தல் உட்பட ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு (சேவையிலிருந்து நீக்குதல் தவிர). (இ) தமது நிர்வாக அதிகார எல்லைக்குள் ஒழுக்காற்று அறைத் தண்டனைகளை விதித்தல்.

02. மேலும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட 2341/51 ஆம் இலக்க மற்றும் 2023.07.20 ஆம் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலிலும், 2436/12 ஆம் இலக்க மற்றும் 2025.05.16 ஆம் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலிலும் உள்ள ஏனைய ஏற்பாடுகள் (திருத்தப்பட்ட ஏற்பாடுகள் தவிர) மாற்றமின்றித் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

03. இந்த அதிகாரக் கையளிப்பு 2026.11.27 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவேண்டும் என இதன்மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

04. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்படுமாயின், சிங்கள மொழி உரையே மேலோங்கும்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஈ. டபிள்யூ. எம். லலித் ஏக்கநாயக்க
தலைவர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலுவலகத்தில்,
கட்டிட இலக்கம் 09,
பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகம்,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07,
2026, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி.

EOG 10 - 0396